In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No.11/2021 | Prosecution witness P.W.4 |
| Name: Vijayakumar | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 28.08.2023

**(Accused is present.)**

முதல் விசாரணை :-

நான் தற்போது முத்துலாபுரத்தில் வசிக்கிறேன். நான் முத்துலாபுரத்தில் உள்ள தனியார் கம்பெனியில் வேலை பார்க்கிறேன். அசா1 முதல் 3 மற்றும் எதிரியை தெரியும். 17.05.2020 ம் தேதி மதியம் சுமார் 2.45 மணியளவில் நானும் என் நண்பர் வினோத்தும் எங்கள் ஊர் வடக்குத் தெருவில் நின்று பேசிக்கொண்டு இருந்தோம். அப்போது பக்கத்தில் சங்கிலி வீட்டிற்கு முன்னால் நின்று எல்லோரும் சண்டை போட்டுக்கொண்டு இருந்தார்கள். சங்கிலி, கிருஷ்ணமூர்த்தி, கற்பகம், அலெக்ஸ், அழகர்சாமி ஆகியோர்கள் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். வாய்த்தகராறுதான் என்று நினைத்து நாங்கள் பேசாமல் இருந்தோம். கொஞ்ச நேரம் கழித்து அய்யோ, அம்மா என சத்தம் கேட்டது. நாங்கள் போய் பார்த்தபோது கிருஷ்ணமூர்த்தி இடது மார்பு பகுதியில் கத்திக்குத்து பட்டு கீழே கிடந்தார். அங்கிருந்த சங்கிலியின் கையில் கத்தி இருந்ததை பார்த்தேன். ஆனால் குத்தியதை பார்க்கவில்லை. ஓடிய எதிரி சங்கிலியை நானும், வினோத்தும் துரத்தினோம். பிடிக்க முடியவில்லை. ஓடிவிட்டார். பின்னர் நாங்கள் திரும்பி வந்தபோது பைக்கில் காயம்பட்ட கிருஷ்ணமூர்த்தியை அலெக்ஸ் வினோத்தும் ஏற்றி வத்தலக்குண்டு அரசு மருத்துவமனை கொண்டு சென்றார்கள். நாங்கள் பின்னாடியே போனோம். அங்கு கிருஷ்ணமூர்த்தி ஏற்கனவே

இறந்துவிட்டதாக சொன்னார்கள். அவர்களுக்குள் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. ஆய்வாளர் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :- இல்லை

A MUTHUSARATHA
Digitally signed by A MUTHUSARATHA
Date: 2023.08.28 17:54:38 +0530

Principal District Judge,
Dindigul.